செய்தி வெளியீடு எண்.107 A நாள்.13.2.2009

## பொது விநியோகத் திட்டத்தில் ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு 1 கோடியே 50 லட்சம் குடும்ப அட்டைதாரர்கள் அரிசி பெறுகிறார்கள்.

### உணவுப் பொருள் வழங்கல் ஆணையர் விளக்கம்

13.02.2009 அன்று தமிழ் நாளிதழ் ஒன்றில் அரசின் ஒரு ரூபாய் அரிசியை தற்போது வெளிமாநிலத்தவர்கள் இங்கிருந்து வாங்கி கடத்துகின்றனர் என்றும், மீதமுள்ள அரிசி, மாவு அரைப்பவர்களுக்கு மொத்தமாக செல்கிறது என்றும் பொது மக்கள் அந்த அரிசியை வாங்கி பயன்படுத்த முடியாததால் வாங்காமல் விட்டு விடுகின்றனர் என்றும், 20 சதவீதம் குடும்ப அட்டைதாரர்களே வாங்கி பயன்படுத்துகின்றனர் என்றும் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கடந்த பல மாதங்களாக அரிசியின் நுகர்வு அளவு 81 சதவீதத்திற்கு மேல் உள்ளது. அதாவது 81 சதவீத அட்டைதாரர்கள் நியாயவிலைக் கடைகளில் அரிசி வாங்குகின்றனர். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு ஒரு கிலோ அரிசி ரூ.2/—க்கு வழங்கப்பட்டு, அது தற்போது ஒரு கிலோ ரூ.1/—க்கு வழங்கப்பட்டு வருவதால் நகரங்கள் மற்றும் கிராமப்புறங்களிலும் பொது மக்கள் வரிசை வரிசையாக நின்று அரிசி மற்றும் சர்க்கரைப் போன்ற அத்தியாவசியப் பொருட்களை வாங்கிச் செல்கின்றனர் என்பதே உண்மை. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு மிகத் தரமான அரிசியையே வழங்கி வருகிறது. அதனால் அதிக அளவில் நுகர்வோர்கள் அரிசியைப் பெற்று பயன்படுத்தி வருகின்றனர். எனவே, 20 சதவீத நுகர்வோர்களே நியாயவிலைக் கடைகளில் அரிசி வாங்கி பயன்படுத்தி வருகின்றனர் என்பது முழுக்க தவறான தகவல்.

மேலும் தமிழ்நாட்டிலிருந்து ஆந்திர மாநிலத்திற்கும், கேரளாவிற்கும் இரயில் மூலமாக அரிசி கடத்தப்படுவது தடுக்கப்பட்டுள்ளது. எல்லையோர மாவட்டங்களிலும், இரயில் நிலையங்களில் கூட கண்காணிப்பினை தீவிரப்படுத்தி கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இரயில்கள் மூலம் அரிசி கடத்தப்படுவது கணிசமான அளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அரிசி கடத்தலை தடுப்பதற்கு இந்த அரசு எடுத்துவரும் பல்வேறு கடும் முயற்சிகளின் காரணமாக அரிசி கடத்தல் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதை யாராலும் மறுக்க முடியாது. இதைப் போன்ற மாபெரும் திட்டங்களை நிறைவேற்றும்போது அங்கொன்றும் இங்கொன்றுமாக தவறுகள் நேர்ந்தாலும், அவற்றை தீர்ப்பதற்கு இந்த அரசு முழு மனதோடு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. எனவே, இதைப் போன்ற தவறுகள் எங்கேனும் இருப்பினும், அது பற்றிய தகவலை சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கோ, மாண்புமிகு உணவு அமைச்சர் அலுவலகத்திற்கோ தெரிவித்தால், உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு, இக்குறைபாடுகளை தடுக்க ஒரு வாய்ப்பாக அமையும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையாளர்
உணவுப்பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9.